**Bildungsdirektion Kanton Zürich**
Volksschulamt

Tamilisch

# புதிதாக அமைக்கப்பட்ட 3வது செக்குண்டார் வகுப்பைப் பற்றி பெற்றோர்களுக்கு தகவல்கள்

## வேலையையும் மேலும் தொடர்ந்து கல்வி கற்பதையும் ஆரம்பிப்பதற்கு அனுகூலமான வழி

### வெற்றி-வெற்றி-நிலை

எதிர்காலக் கல்விக்கு ஒரு மூலதனம்: சூரிச் மாநிலத்திலுள்ள 3வது செக்குண்டார் வகுப்பிலுள்ள மாணவிகளையும், மாணவர்களையும் ஒரு வேலைக்கான பயிற்சிக்கு அல்லது ஒரு தொடர்ந்து மேற்கொண்டு படிப்பதற்கு சரியான முறையில் ஆயத்தம் செய்தல்.
ஒரு வெற்றி-வெற்றி-நிலை ஒருபக்கம் செக்குண்டார் வகுப்பிற்கும் அதோடு இன்னொரு பக்கம் வேலைக்கு பயிற்சி அளிக்கும் நிறுவனங்களுக்கு அல்லது தொடர்ந்து படிப்பதற்கு தொழில் துறைக்கு கற்கும் கல்லூரிகளுக்கும்- மேலும் கிம்நாசியத்திற்கும் வழிகாட்டுவதற்கு கடுமையாக பாடுபடுகிறது. சூரிச் மாநிலத்திற்கான தொழிற் சங்கம் (KGV), சூரிச் மாநிலத்திலுள்ள ஒரே குடையின் கீழ் இயங்கும் சங்கம் KMU போன்றவை செக்குண்டார் வகுப்பை புதிதாக அமைப்பதற்கு உதவுகின்றன.

### புதிதாக அமைப்பதன் நோக்கம்

- வேலையைத் தெரிவு செய்யும் நடவடிக்கையில் பாடசாலையும், வேலைக்கான ஆலோசனை கூறுபவர்களும் அதோடு பெற்றோரும் நெருக்கமாகவும் மேலும் முன்னதாகவேயும் சேர்ந்து ஒத்துழைப்பது.

- 2வது செக்குண்டார் வகுப்பில் ‹‹Stellwerk-Tests 8›› சோதனையின் அடிப்படையில் தனிப்பட்ட முறையில் பிள்ளையின் நிலையைத் தீர்மானித்து அதன்பின் அதைப்பற்றி பேச்சுவார்த்தை செய்வதும் மேலும் முடிவிற்கு ஒத்துழைப்பதும்.

- 3வது செக்குண்டார் வகுப்பில் விரும்பித் தேர்ந்தெடுக்கும் பாடத்திற்கு தனிப்பட்ட முறையில் ஊக்குவிக்கும் சலுகைகள் இருப்பதனால் அதன்மூலம் எல்லா மாணவிகளும், மாணவர்களும் குறிப்பாக அவர்களினுடைய திறமையை கூட்டுவதற்கு ஏற்றவாறு படிப்பதற்கும் மேலும் முன்னேற்றவும் படுவார்கள்.

- குறிப்பாக தெரியாதவற்றை பழகுவதற்கும், தெரிந்தவற்றை பலப்படுத்தவும் பழகுவார்கள்.

- திட்டமிட்டு பாடம் நடத்துவதன் மூலமும் அதோடு 3வது செக்குண்டார் வகுப்பு முடிவில் செய்யும் வேலையின் மூலமும் தனியாகவும்-, மற்றவர்களோடு சேர்ந்தும்- செயற்படும் திறமை பலப்படுத்தப்படும்.

- வேலைக்கான அடிப்படைப் பயிற்சிக்கும் மேலும் குறுகிய கால கிம்நாசியத்திற்கும், தொழில் பயிற்சிக் கல்லூரிக்கும் போவதற்கான நுளைவுத் தேர்விற்கும் வெற்றிகரமாகப் போவதற்கு தயார் செய்யப்படும்.

## பொறுப்பு எடுப்பது

- 2வது செக்குண்டார் வகுப்பின் நடுப்பகுதியில் ஒரே மாதிரியாக அமைக்கப்பட்ட திறமையின் நிலையை நிர்ணயிக்கும் சோதனை ‹‹Stellwerk 8›› மூலம் ஒரு தனிப்பட்ட முறையில் மாணவிகளினதும், மாணவர்களினதும் படிக்கும் நிலையை குறிப்பெடுத்து சரியாகக் காட்டுவார்கள், இது வகுப்புக்களின் வகைகளில் தங்கியிருக்காது.

- ‹‹Stellwerk 8›› இது ஒரு கணணி மூலம் செய்யும் சோதனை முறை, இது டொச், பிரெஞ்சு, ஆங்கிலம், கணக்கு, இயற்கை மேலும் தொழில் நுட்பம் போன்ற பாடங்களில் பிள்ளையின் நிலையை தீர்மானிக்க உதவும்.

- Stellwerk ஒரு ஊக்குவிப்பதற்கான சோதனை முறை, இது மாணவிகளினதும், மாணவர்களினதும் திறமையைக் குறிப்பெடுத்து, எதில் திறமையாகவும், எதில் குறைவாகவும் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. இந்த திறமையை குறிப்பெடுப்பதும் மேலும்

ஆராய்ச்சியும், நற்பயன் அளிக்கக்கூடிய வகையில் ஊக்குவிப்பதற்கு சரியான முறையில் நடவடிக்கைகள் எடுப்பதற்கு உதவுகின்றன.

- பிள்ளையின் நிலையைப்பற்றி ஒரு பேச்சுவார்த்தை செய்யும் பொழுது பெற்றோருடனும், மாணவிகளுடனும், மாணவர்களுடனும் சேர்ந்து அவசியம் செய்யவேண்டிய கருத்துகளுக்கும் மேலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டிய விஷயங்களுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.

- 3வது செக்குண்டார் வகுப்பில் ஒவ்வொருவருக்கும் கற்பதற்கு சலுகைகள் இருப்பதனால் மாணவிகளுக்கும், மாணவர்களுக்கும் திறமையை மேலும் கூட்டுவதற்கும் அதோடு தெரியாதவற்றை பழகுவதற்கும் உதவுகிறது.

- குறிப்பாக திறமை வாய்ந்த மாணவிகளும், மாணவர்களும் கூட, குறுகிய கால கிம்நாசியம் அல்லது தொழில் பயிற்சிக் கல்லூரிக்குப் போக திட்டமிட்டவர்கள் விஷேஷமாக ஊக்குவிக்கப்படுவார்கள்.

- 3வது செக்குண்டார் வகுப்பில் விஷேஷமாக முக்கியத்துவம் கொடுப்பார்கள், மாணவிகளும், மாணவர்களும் அவர்களுடைய எதிர்கால வேலையிலும் மேலும் வாழ்க்கையிலும் சொந்தமாகப் பொறுப்பெடுக்கப் பழகுவதற்கு.

இந்தத் திட்டம் “3வது செக்குண்டார் வகுப்பை புதிதாக அமைப்பது“ பல வேறுபட்ட பரிசோதனை செய்து பார்க்கும் பாடசாலைகளில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டு மேலும் பாடசாலை ஆரம்பிக்கும் வருடம் 2009/10 இலிருந்து ஒவ்வொரு நிலையிலும் - செக்குண்டார் வகுப்பின் 1ம் வருடத்தில் ஆரம்பித்து - அறிமுகப்படுத்தப்படும். கோடைகாலம் 2012 இலிருந்து முதலாவதாக மாணவிகளும், மாணவர்களும் புதிதாக அமைக்கப்பட்ட 3வது செக்குண்டார் வகுப்பை நிறைவு செய்வார்கள்.
புதிதாக அமைக்கப்பட்டதைப் பற்றிய மேலதிக விபரங்கள் www.vsa.zh.ch இல் உள்ளன.